**Signature and Name of Invigilator**

1. (Signature) ____________________

   (Name) ____________________

2. (Signature) ____________________

   (Name) ____________________

**OMR Sheet No. :** ....................................................

(To be filled by the Candidate)

**Roll No.** | | | | | | | | |

(In figures as per admission card)

**Roll No.** ____________________

(In words)

**J 2 6 1 5**

# PAPER - II
# TAMIL

**Time : 1¼ hours]** **[Maximum Marks : 100**

Number of Pages in this Booklet : **16** Number of Questions in this Booklet : **50**

## Instructions for the Candidates

1. Write your roll number in the space provided on the top of this page.
2. This paper consists of fifty multiple choice type of questions.
3. At the commencement of examination, the question booklet will be given to you. In the first 5 minutes, you are requested to open the booklet and compulsorily examine it as below :
   (i) To have access to the Question Booklet, tear off the paper seal on the edge of this cover page. Do not accept a booklet without sticker seal and do not accept an open booklet.
   (ii) **Tally the number of pages and number of questions in the booklet with the information printed on the cover page. Faulty booklets due to pages/questions missing or duplicate or not in serial order or any other discrepancy should be got replaced immediately by a correct booklet from the invigilator within the period of 5 minutes. Afterwards, neither the Question Booklet will be replaced nor any extra time will be given.**
   (iii) After this verification is over, the Test Booklet Number should be entered on the OMR Sheet and the OMR Sheet Number should be entered on this Test Booklet.
4. Each item has four alternative responses marked (1), (2), (3) and (4). You have to darken the circle as indicated below on the correct response against each item.

   **Example :** ① ② ● ④ where (3) is the correct response.
5. Your responses to the items are to be indicated in the **OMR Sheet given inside the Booklet only.** If you mark your response at any place other than in the circle in the OMR Sheet, it will not be evaluated.
6. Read instructions given inside carefully.
7. Rough Work is to be done in the end of this booklet.
8. If you write your Name, Roll Number, Phone Number or put any mark on any part of the OMR Sheet, except for the space allotted for the relevant entries, which may disclose your identity, or use abusive language or employ any other unfair means, such as change of response by scratching or using white fluid, you will render yourself liable to disqualification.
9. You have to return the original OMR Sheet to the invigilators at the end of the examination compulsorily and must not carry it with you outside the Examination Hall. You are however, allowed to carry original question booklet and duplicate copy of OMR Sheet on conclusion of examination.
10. **Use only Blue/Black Ball point pen.**
11. **Use of any calculator or log table etc., is prohibited.**
12. **There are no negative marks for incorrect answers.**

## परीक्षार्थियों के लिए निर्देश

1. इस पृष्ठ के ऊपर नियत स्थान पर अपना रोल नम्बर लिखिए।
2. इस प्रश्न पत्र में पचास बहुविकल्पीय प्रश्न हैं।
3. परीक्षा प्रारम्भ होने पर, प्रश्न पुस्तिका आपको दे दी जायेगी। पहले पाँच मिनट आपको प्रश्न पुस्तिका खोलने तथा उसकी निम्नलिखित जाँच के लिए दिये जायेंगे, जिसकी जाँच आपको अवश्य करनी है :
   (i) प्रश्न पुस्तिका खोलने के लिए पुस्तिका पर लगी कागज की सील को फाड़ लें। खुली हुई या बिना स्टीकर सील की पुस्तिका स्वीकार न करें।
   (ii) **कवर पृष्ठ पर छपे निर्देशानुसार प्रश्न-पुस्तिका के पृष्ठ तथा प्रश्नों की संख्या को अच्छी तरह चैक कर लें कि ये पूरे हैं। दोषपूर्ण पुस्तिका जिनमें पृष्ठ/प्रश्न कम हों या दुबारा आ गये हों या सीरियल में न हों अर्थात किसी भी प्रकार की त्रुटिपूर्ण पुस्तिका स्वीकार न करें तथा उसी समय उसे लौटाकर उसके स्थान पर दूसरी सही प्रश्न-पुस्तिका ले लें। इसके लिए आपको पाँच मिनट दिये जायेंगे। उसके बाद न तो आपकी प्रश्न-पुस्तिका वापस ली जायेगी और न ही आपको अतिरिक्त समय दिया जायेगा।**
   (iii) इस जाँच के बाद प्रश्न पुस्तिका का नंबर OMR पत्रक पर अंकित करें और OMR पत्रक का नंबर इस प्रश्न पुस्तिका पर अंकित कर दें।
4. प्रत्येक प्रश्न के लिए चार उत्तर विकल्प (1), (2), (3) तथा (4) दिये गये हैं। आपको सही उत्तर के वृत्त को पेन से भरकर काला करना है जैसा कि नीचे दिखाया गया है।

   **उदाहरण :** ① ② ● ④ जबकि (3) सही उत्तर है।
5. प्रश्नों के उत्तर **केवल प्रश्न पुस्तिका के अन्दर दिये गये OMR पत्रक पर ही** अंकित करने हैं। यदि आप OMR पत्रक पर दिये गये वृत्त के अलावा किसी अन्य स्थान पर उत्तर चिन्हांकित करते हैं, तो उसका मूल्यांकन नहीं होगा।
6. अन्दर दिये गये निर्देशों को ध्यानपूर्वक पढ़ें।
7. कच्चा काम (Rough Work) इस पुस्तिका के अन्तिम पृष्ठ पर करें।
8. यदि आप OMR पत्रक पर नियत स्थान के अलावा अपना नाम, रोल नम्बर, फोन नम्बर या कोई भी ऐसा चिह्न जिससे आपकी पहचान हो सके, अंकित करते हैं अथवा अभद्र भाषा का प्रयोग करते हैं, या कोई अन्य अनुचित साधन का प्रयोग करते हैं, जैसे कि अंकित किये गये उत्तर को मिटाना या सफेद स्याही से बदलना तो परीक्षा के लिये अयोग्य घोषित किये जा सकते हैं।
9. आपको परीक्षा समाप्त होने पर मूल OMR पत्रक निरीक्षक महोदय को लौटाना आवश्यक है और परीक्षा समाप्ति के बाद उसे अपने साथ परीक्षा भवन से बाहर न लेकर जायें। हालांकि आप परीक्षा समाप्ति पर मूल प्रश्न पुस्तिका तथा OMR पत्रक की डुप्लीकेट प्रति अपने साथ ले जा सकते हैं।
10. **केवल नीले/काले बाल प्वाईंट पेन का ही इस्तेमाल करें।**
11. **किसी भी प्रकार का संगणक (कैलकुलेटर) या लाग टेबल आदि का प्रयोग वर्जित है।**
12. **गलत उत्तरों के लिए कोई नकारात्मक अंक नहीं हैं।**



www.examrace.com

# TAMIL
# தமிழ்
# PAPER - II
## தாள் - II

**Note :** This paper contains **fifty (50)** multiple choice questions, each question carrying **two** (2) marks. Attempt all the questions (50 x 2 = 100)

**குறிப்பு :** இந்த வினாத்தாள் **ஐம்பது (50)** விடை தெரி வினாக்களைக் கொண்டது. ஒவ்வொரு வினாவுக்கும் உரிய மதிப்பெண்கள் **இரண்டு (2)**. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. (50 x 2 = 100)

**1.** தமிழ், தெலுங்கு, கன்னடம், குஜராத்தி, மராத்தி ஆகியவற்றைக் குறிக்கும் பொதுப் பெயர் :

(1) பஞ்சாக்கரம் (2) பஞ்ச ஆரியம்

(3) பஞ்ச திராவிடம் (4) பஞ்ச பாடைகள்

**2.** புறவும் புறவு சார்ந்த இடமும் :

(1) மருதம் (2) குறிஞ்சி

(3) நெய்தல் (4) முல்லை

**3.** 'இறையனார் அகப்பொருள்' களவியல் கிளவிகளுக்கு இலக்கியம் :

(1) தஞ்சைவாணன் கோவை (2) பாண்டிக் கோவை

(3) திருக்கோவையார் (4) ஒரு துறைக் கோவை

**4.** 'கருதிய பொருள் தொகுத்து அது புலப்படுத்தற்கு ஒத்தது என்று உரைப்பது':

(1) ஒட்டணி (2) வேற்றுமையணி

(3) விபாவனையணி (4) வேற்றுப்பொருள் வைப்பணி

**5.** நல்லந்துவனார் தொகுத்தது :

(1) குறுந்தொகை (2) நற்றிணை

(3) அகநானூறு (4) கலித்தொகை

**6.** திருமாலைப் பாதாதிகேச வருணனை செய்து பாடியவர் :

(1) குலசேகர ஆழ்வார் (2) தொண்டரடிப் பொடியாழ்வார்

(3) திருப்பாண் ஆழ்வார் (4) பெரியாழ்வார்



www.examrace.com

7. இராமாயணத்தின் உத்தரகாண்டம் பாடியவர் :

(1) கம்பர் (2) ஒட்டக்கூத்தர்

(3) அதிவீரராம பாண்டியர் (4) புகழேந்தி

8. இலியட், ஒடிசி ஆகிய காப்பியங்களுக்கு நிகரானதாக ஜி.யு. போப் குறிப்பிடும் காப்பியம் :

(1) சீவகசிந்தாமணி (2) சிலப்பதிகாரம்

(3) மணிமேகலை (4) தேம்பாவணி

9. 'மூன்றும் ஆறும்' என்ற நூலின் ஆசிரியர் :

(1) தமிழன்பன் (2) அப்துல் ரகுமான்

(3) மேத்தா (4) மீரா

10. சீருடன் சீரினை இயையப் புணர்ப்பது :

(1) அசை (2) தளை (3) தொடை (4) அடி

11. பெண்டு + கை :

(i) பெண்டன்கை

(ii) பெண்டங்கை

(iii) பெண்டின்கை

(iv) பெண்டாங்கை

இவற்றுள்

(1) (i), (iii) சரி

(2) (i), (iv) சரி

(3) (ii), (iii) சரி

(4) (i), (ii) சரி

12. அகிலனின் புகழ் பெற்ற புதினங்கள் :

(i) வானம் வசப்படும்

(ii) சித்திரப்பாவை

(iii) குறிஞ்சித்தேன்

(iv) பாவை விளக்கு

இவற்றுள் :

(1) (i), (ii) சரி

(2) (i), (iii) சரி

(3) (ii), (iii) சரி

(4) (ii), (iv) சரி



www.examrace.com

13. வெண்பாவின் ஓசை வகைகள் :

(i) ஏந்திசைச் செப்பல்

(ii) பிரிந்திசைச் செப்பல்

(iii) தூங்கிசைச் செப்பல்

(iv) ஒழுகிசைச் செப்பல்

இவற்றுள் :

(1) (i), (ii), (iii) சரி

(2) (i), (iii), (iv) சரி

(3) (ii), (iii), (iv) சரி

(4) (i), (ii), (iv) சரி

14. இந்திரா பார்த்தசாரதி படைத்த நாடகங்கள் :

(i) ஔவையார்

(ii) மழை

(iii) வயிறு

(iv) பசி

இவற்றுள் :

(1) (i), (ii) சரி

(2) (ii), (iv) சரி

(3) (ii), (iii) சரி

(4) (i), (iv) சரி

15. பண்டைத் தமிழர்தம் அணிகலன்கள் :

(i) மோசை

(ii) விரிசிகை

(iii) குரம்பை

(iv) பருமம்

இவற்றுள் :

(1) (i), (ii), (iii) சரி

(2) (i), (ii), (iv) சரி

(3) (ii), (iii), (iv) சரி

(4) (i), (iii), (iv) சரி



www.examrace.com

16. பிஞ்ச வகைகள் :
(i) மூசு
(ii) செங்காய்
(iii) குரும்பை
(iv) சச்சல்
இவற்றுள் :
(1) (i), (ii), (iii) சரி
(2) (i), (ii), (iv) சரி
(3) (i), (iii), (iv) சரி
(4) (ii), (iii), (iv) சரி

17. கோயில் பிணாக்கள் :
(i) கோயிலில் திருவலகிட்டனர்
(ii) கோயிலில் பூ விற்றனர்
(iii) கோயிலில் திருமெழுக்கிட்டனர்
(iv) ஆடல், பாடல் நிகழ்த்தினர்
இவற்றுள் :
(1) (i), (ii), (iii) சரி
(2) (i), (ii), (iv) சரி
(3) (i), (iii), (iv) சரி
(4) (ii), (iii), (iv) சரி

18. உறுதிக்கூற்று (உ) : மாறனகப்பொருள் என்பது ஓர் அகப்பொருள் இலக்கண நூல்.
காரணம் (கா) : அது மாறன் என்பவர் இயற்றியது.
(1) (உ) சரி ; (கா) சரியன்று
(2) (உ) சரியன்று ; (கா) சரி
(3) (உ) சரி; (கா) சரி
(4) (உ) சரியன்று; (கா) சரியன்று

19. உறுதிக்கூற்று (உ) : ''தமிழ் தழீஇய சாயலர்'' என அழகிய பெண்களைத் திருத்தக்கத் தேவர் குறிப்பிடுகிறார்.
காரணம் (கா) : திருத்தக்கத் தேவர் மகளிர்பால் தனி ஈடுபாடு உடையவர்.
(1) (உ) சரி; (கா) சரி
(2) (உ) சரி; (கா) சரியன்று
(3) (உ) சரியன்று; (கா) சரியன்று
(4) (உ) சரியன்று; (கா) சரி


www.examrace.com

20. உறுதிக்கூற்று (உ) : உலகமே குவலயக் கிராமமாகச் சுருங்கிவிட்டது.

காரணம் (கா) : அறிவியல் தொழில் நுட்பத் துறையில் வியக்கத்தக்க வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

(1) (உ) சரி ; (கா) சரியன்று
(2) (உ) சரியன்று ; (கா) சரி
(3) (உ) சரியன்று ; (கா) சரியன்று
(4) (உ) சரி ; (கா) சரி

21. உறுதிக்கூற்று (உ) : நீர்வீழ்ச்சி என்பது வழக்கில் நிலைத்து விட்டது.

காரணம் (கா) : தமிழில் ஆங்கிலத்தின் தாக்கம் மிகுந்து வருகிறது.

(1) (உ) சரி ; (கா) சரியன்று
(2) (உ) சரி ; (கா) சரி
(3) (உ) சரியன்று; (கா) சரியன்று
(4) (உ) சரியன்று; (கா) சரி

22. உறுதிக்கூற்று (உ) : ஊசிமுறிப் பாடல்கள் எனப் பாடல்கள் சில உண்டு.

காரணம் (கா) : ஓலைச் சுவடியில் எழுத இயலாத ஒலிக்குறிப்புகள் கொண்ட பாடல்கள் அவை.

(1) (உ) சரி ; (கா) சரியன்று
(2) (உ) சரி ; (கா) சரி
(3) (உ) சரியன்று ; (கா) சரி
(4) (உ) சரியன்று ; (கா) சரியன்று

23. உறுதிக்கூற்று (உ) : பண்டு வாணிகச் சாத்துகள் இருந்தன.

காரணம் (கா) : அந்நாளில் ஆறலைக்கும் கள்வருக்கு அஞ்சிக் கூட்டம் கூட்டமாகக் கூடித் தம் பண்டங்களை வணிகர்கள் பல இடங்களுக்கும் விற்பனைக்கு எடுத்துச் செல்வர்.

(1) (உ) சரி ; (கா) சரி
(2) (உ) சரி ; (கா) சரியன்று
(3) (உ) சரியன்று ; (கா) சரியன்று
(4) (உ) சரியன்று ; (கா) சரி



www.examrace.com

24. உறுதிக்கூற்று (உ) : முத்தையா என்னும் தன் இயற்பெயரைக் கண்ணதாசன் என மாற்றிக்கொண்டார்.

காரணம் (கா) : அவர் பாரதியாரின் 'கண்ணன் பாட்டு' மீது பேரீடுபாடு கொண்டிருந்தார்.

(1) (உ) சரி; (கா) சரியன்று
(2) (உ) சரி; (கா) சரி
(3) (உ) சரியன்று; (கா) சரியன்று
(4) (உ) சரியன்று; (கா) சரி

25. உறுதிக்கூற்று (உ) : ஆதிநாதர் பிள்ளைத்தமிழ் என்றொரு சிற்றிலக்கியம் உண்டு.

காரணம் (கா) : அந்நூலை இயற்றியவர் ஆதிநாதர் ஆவார்.

(1) (உ) சரி; (கா) சரி
(2) (உ) சரியன்று; (கா) சரி
(3) (உ) சரி; (கா) சரியன்று
(4) (உ) சரியன்று; (கா) சரியன்று

26. உறுதிக்கூற்று (உ) : காங்கேயர் இயற்றிய உரிச்சொல் நிகண்டில் 'வந்தனை காணல், வணங்கல் பணிதலே, தம்தலை தாழ்தல் சலாம் செய்தல்' என எழுதியுள்ளார்.

காரணம் (கா) : அவர் காலத்தில் கிறித்தவ சமயம் தமிழ் மண்ணில் வேரூன்றிவிட்டது.

(1) (உ) சரி; (கா) சரி
(2) (உ) சரியன்று; (கா) சரி
(3) (உ) சரி; (கா) சரியன்று
(4) (உ) சரியன்று; (கா) சரியன்று

27. உறுதிக்கூற்று (உ) : 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்னும் நெறியைத் திருமூலர் வலியுறுத்துகிறார்.

காரணம் (கா) : அவருடைய நெறி ''சமரச சன்மார்க்கம்'' ஆகும்.

(1) (உ) சரி; (கா) சரி
(2) (உ) சரி; (கா) சரியன்று
(3) (உ) சரியன்று; (கா) சரியன்று
(4) (உ) சரியன்று; (கா) சரி



www.examrace.com

28. **நிரல்படுத்துக :** எழுத்துவகை.

(1) ஆணெழுத்து, பெண்ணெழுத்து, அலியெழுத்து, அமிர்தவெழுத்து, நஞ்செழுத்து.

(2) ஆணெழுத்து, பெண்ணெழுத்து, அமிர்தவெழுத்து, நஞ்செழுத்து, அலியெழுத்து.

(3) ஆணெழுத்து, அமிர்தவெழுத்து, அலியெழுத்து, பெண்ணெழுத்து, நஞ்செழுத்து.

(4) ஆணெழுத்து, பெண்ணெழுத்து, நஞ்செழுத்து, அலியெழுத்து, அமிர்தவெழுத்து.

29. **நிரல்படுத்துக :** பஞ்சபாணம் :

(1) முல்லை, அசோகு, நீலம், சூதம் வனசம்

(2) முல்லை, அசோகு, வனசம், சூதம், நீலம்

(3) முல்லை, நீலம், வனசம், சூதம், அசோகு

(4) முல்லை, நீலம், வனசம், அசோகு, சூதம்

30. **நிரல்படுத்துக :** முன்னிலைப் பெயர்.

(1) நீ, நீயிர், நீவிர், எல்லீர், நீர்.

(2) நீ, நீர், எல்லீர், நீவிர், நீயிர்.

(3) நீ, எல்லீர், நீயிர், நீவிர், நீர்.

(4) நீ, நீர், நீயிர், நீவிர், எல்லீர்

31. **நிரல்படுத்துக :** வாசப்பண்டம்.

(1) இலவங்கம், ஏலம், சாதிக்காய், கற்பூரம், தக்கோலம்

(2) இலவங்கம், கற்பூரம், சாதிக்காய், ஏலம், தக்கோலம்

(3) இலவங்கம், ஏலம், கற்பூரம், சாதிக்காய், தக்கோலம்

(4) இலவங்கம், தக்கோலம், கற்பூரம், ஏலம், சாதிக்காய்

32. **நிரல்படுத்துக :** ஓசை.

(1) எடுத்தல், படுத்தல், நலிதல், விலங்கல்

(2) எடுத்தல், விலங்கல், நலிதல், படுத்தல்

(3) எடுத்தல், நலிதல், படுத்தல், விலங்கல்

(4) எடுத்தல், நலிதல் விலங்கல், படுத்தல்



www.examrace.com

33. **நிரல்படுத்துக :** கொன்னைச் சொல்.

(1) அச்சம் பயமிலி, பெருமை, காலம்

(2) அச்சம், பெருமை, பயமிலி, காலம்

(3) அச்சம், பயமிலி, காலம், பெருமை

(4) அச்சம், காலம், பெருமை, பயமிலி

34. **நிரல்படுத்துக :** சிவபூசை இயல்பு.

(1) சரியை, யோகம், ஞானம், கிரியை

(2) சரியை, கிரியை, யோகம், ஞானம்

(3) சரியை, ஞானம், யோகம், கிரியை

(4) சரியை, கிரியை, ஞானம், யோகம்

35. **நிரல்படுத்துக :** பால்கெழு கிளவிக்கு உரியவர்கள்.

(1) தலைவி, செவிலி, நற்றாய், தோழி

(2) தலைவி, நற்றாய், தோழி, செவிலி

(3) தலைவி, தோழி, நற்றாய், செவிலி

(4) தலைவி, தோழி, செவிலி, நற்றாய்

36. **பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| (a) | வெகுளி | (i) | அழுகை |
| (b) | இளிவரல் | (ii) | உருத்திரம் |
| (c) | உவகை | (iii) | இழிப்பு |
| (d) | அவலம் | (iv) | காமம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (iii) | (iv) | (i) |
| (2) | (ii) | (iii) | (i) | (iv) |
| (3) | (ii) | (i) | (iv) | (iii) |
| (4) | (ii) | (i) | (iii) | (iv) |



www.examrace.com

37. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | சருக்கம் | (i) | சீவக சிந்தாமணி |
| (b) | காதை | (ii) | கம்பராமாயணம் |
| (c) | படலம் | (iii) | பெரியபுராணம் |
| (d) | இலம்பகம் | (iv) | மணிமேகலை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (iii) | (ii) | (i) | (iv) |
| (2) | (iii) | (i) | (iv) | (ii) |
| (3) | (iii) | (iv) | (ii) | (i) |
| (4) | (iii) | (i) | (ii) | (iv) |

38. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | தோடுடைய செவியன் | (i) | அப்பர் |
| (b) | பித்தா பிறைசூடி | (ii) | மாணிக்கவாசகர் |
| (c) | யார்க்கும் ஊதியமே | (iii) | திருஞானசம்பந்தர் |
| (d) | இன்பமே எந்நாளும் துன்பமில்லை | (iv) | சுந்தரர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (iii) | (iv) | (ii) | (i) |
| (2) | (iii) | (iv) | (i) | (ii) |
| (3) | (iii) | (ii) | (iv) | (i) |
| (4) | (iii) | (ii) | (i) | (iv) |

39. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | சிவப்பிரகாசர் | (i) | காசிக்காண்டம் |
| (b) | அதிவீரராம பாண்டியன் | (ii) | திருவாரூர் புராணம் |
| (c) | ஞானக்கூத்தர் | (iii) | சேதுபுராணம் |
| (d) | நிரம்ப அழகிய தேசிகர் | (iv) | திருக்கூவப் புராணம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (iv) | (iii) | (i) | (ii) |
| (2) | (iv) | (ii) | (iii) | (i) |
| (3) | (iv) | (i) | (iii) | (ii) |
| (4) | (iv) | (i) | (ii) | (iii) |



www.examrace.com

40. **பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| (a) | சொக்கநாதர் உலா | (i) | ஒட்டக்கூத்தர் |
| (b) | ஆளுடைய பிள்ளையார் திருவுலா | (ii) | தத்துவராயர் |
| (c) | திருக்குற்றாலநாதர் உலா | (iii) | நம்பியாண்டார் நம்பி |
| (d) | மூவருலா | (iv) | திரிகூடராசப்பக் கவிராயர் |

| | **(a)** | **(b)** | **(c)** | **(d)** |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (iii) | (i) | (iv) |
| (2) | (ii) | (i) | (iii) | (iv) |
| (3) | (ii) | (i) | (iv) | (iii) |
| (4) | (ii) | (iii) | (iv) | (i) |

41. **பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| (a) | பட்டினப்பாலை | (i) | வெறிக்களம் தடுக்கும் வியலறை |
| (b) | பெரும்பாணாற்றுப்படை | (ii) | வான் வீழ்க்குவனே வளி மாற்றுவனே |
| (c) | சிறுபாணாற்றுப்படை | (iii) | காட்டு மாவும் உறுகண் செய்யா |
| (d) | மலைபடுகடாம் | (iv) | புனிற்றுநாய் குரைக்கும் புல்லென் அட்டில் |

| | **(a)** | **(b)** | **(c)** | **(d)** |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (iv) | (iii) | (i) |
| (2) | (ii) | (i) | (iii) | (iv) |
| (3) | (ii) | (iii) | (i) | (iv) |
| (4) | (ii) | (iii) | (iv) | (i) |

42. **பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| (a) | கடிதம் | (i) | கஸ்தூரிரங்கன் |
| (b) | குயில் | (ii) | சுரதா |
| (c) | இலக்கியம் | (iii) | பாரதிதாசன் |
| (d) | கணையாழி | (iv) | கண்ணதாசன் |

| | **(a)** | **(b)** | **(c)** | **(d)** |
|---|---|---|---|---|
| (1) | (iv) | (iii) | (ii) | (i) |
| (2) | (iv) | (ii) | (i) | (iii) |
| (3) | (iv) | (iii) | (i) | (ii) |
| (4) | (iv) | (i) | (iii) | (ii) |



www.examrace.com

43. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | தும்பை | (i) | முழுமுதலரண் முற்றலும் கோடலும். |
| (b) | வெட்சி | (ii) | எஞ்சா மண்ணசை வேந்தனை வேந்தன் அஞ்சுதகத் தலைச் சென்று அடுவது. |
| (c) | வஞ்சி | (iii) | மைந்து பொருளாக வந்த வேந்தனைச் சென்று தலையழிப்பது |
| (d) | உழிஞை | (iv) | வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின் ஆதந்து ஓம்புவது. |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (iii) | (iv) | (i) | (ii) |
| (2) | (iii) | (ii) | (iv) | (i) |
| (3) | (iii) | (ii) | (i) | (iv) |
| (4) | (iii) | (iv) | (ii) | (i) |

44. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | பெரிது | (i) | பயனின்மை |
| (b) | சிறுது | (ii) | நன்று |
| (c) | பழுது | (iii) | எஞ்சாப் பொருட்கு |
| (d) | முழுது | (iv) | வறிது |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (iv) | (i) | (iii) |
| (2) | (ii) | (iv) | (iii) | (i) |
| (3) | (ii) | (iii) | (iv) | (i) |
| (4) | (ii) | (iii) | (i) | (iv) |

45. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | காடுறை உலகம் | (i) | மருதம் |
| (b) | மைவரை உலகம் | (ii) | நெய்தல் |
| (c) | தீம்புனல் உலகம் | (iii) | குறிஞ்சி |
| (d) | பெருமணல் உலகம் | (iv) | முல்லை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (iv) | (ii) | (iii) | (i) |
| (2) | (iv) | (ii) | (i) | (iii) |
| (3) | (iv) | (iii) | (i) | (ii) |
| (4) | (iv) | (iii) | (ii) | (i) |



www.examrace.com

(46 - 50) **கீழ்வரும் பாடல் பகுதியைப் படிக்கவும். இதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு உரிய விடை அளிக்கவும்.**

மண்குடில் வாழ்ந்திடும் ஏழையும் ஒரு
மாளிகை வாழ்ந்திடு செல்வனும்
அண்ணனும் தம்பியும் என்றிடில் துயர்
ஆக்கிடு பேதம் பொருந்துமோ?
கண்ணெனப் போற்றும் சுதந்திரம் இந்தக்
கர்ஜனையை எட்டுத் திக்கிலும்
விண்ணிடி யென்ன முழக்கிடும் உயர்
வேதப் பொருளெனக் கூறுவேன் !

இந்திய நாட்டினை ஆண்டுமே மிடி
ஏழ்மைப் பெருக்கிய வெள்ளையர்
கொந்திடு பேதங்கள் ஆக்கியே நமைக்
கொள்ளை யடித்தனர் பாவிகள் !
வந்தனன் காந்தியும் மண்ணிலே இருள்
வானிடை மின்னலைப் போலவே
நொந்திடு பேதங்கள் தீரவே பெரு
நோன்பு சுதந்திரம் வேண்டினன்

இந்திய மக்கள் எழுந்தனர் அவன்
எண்ணங் குளிர்ந்திடப் போரிலே
தந்தையர் அன்னையர் மூத்தவர் அவர்
தம்முடை மக்களும் பேரரும்
சிந்திய ரத்தம் பெருங்கடல் அவர்
தியாகக்கதை ஒரு பாரதம்
செந்தமிழ் நாட்டிடைப் பாரதி இதைத்
தேன்கவி கொண்டு துதித்தனன்!

'நாற்பது கோடியும் ஓருரு' என
நானிலம் கண்டு சிலிர்த்தது!
மாற்றவர் அஞ்சி நடுங்கிட கடல்
மாப்படை வீரர் எழுந்தனர் !
காற்றினைச் சாடும் விமானமாம் அதன்
கண்ணுறும் வீரரும் கூடினர்
கூற்றைச் சிரிக்கும் தரைப்படை இந்தக்
கொள்கையில் ஒற்றுமை கண்டது



www.examrace.com

மக்களும் அன்னவர் பக்கலில் இந்த
மாப்படை வீரரும் சேர்ந்தனர் !
தக்தக் கெனப்பறை கொட்டியே இதைச்
சாற்றினன் காலத்தின் தூதுவன்
கக்கக் கெனநகை செய்தனன் இதைக்
கண்டு நடுங்கினர் வெள்ளையர்
பொக்கென ஆணவம் வீழ்ந்திட சிறைப்
பூக்கள் யாவும் தெறித்தன !

நற்றவ மான சுதந்திரம் மறு
நாளில் பிறந்தது ஜோதிபோல்
புற்றடி மையிருள் கூட்டினை ஒரு
பொற்கதிர் வெட்டி மடித்தது
ஒற்றுமை சாதித்த வெற்றியை உயர்
உண்மையை மாநிலம் கண்டது
தெற்றெனக் காலை விடிந்தது புது
சேதியை மாந்தர்கள் கேட்டனர் !

**46.** விடுதலை பிறந்தது :

(1) இடி போல (2) மின்னல் போல
(3) ஜோதி போல (4) கண்போல

**47.** விடுதலைப் போராட்டத்தின்போது :

(i) இந்தியர் சிந்திய ரத்தம் பெருங்கடல்
(ii) இந்தியர் தியாகக்கதை பாரதம்
(iii) மலர்ந்தது வெள்ளையர் ஆணவம்
(iv) தெறித்தன சிறைப்பூக்கள் யாவும்

இவற்றுள்

(1) (ii) (iii) (iv) சரி
(2) (i) (iii) (iv) சரி
(3) (i) (ii) (iii) சரி
(4) (i) (ii) (iv) சரி



www.examrace.com

48. உறுதிக்கூற்று (உ) : நாற்பது கோடியும் ஒருருவாயிற்று.
காரணம் (கா) : நானிலம் சிலிர்த்தது நன்கு.

(1) (உ) சரியன்று; (கா) சரி
(2) (உ) சரி; (கா) சரி
(3) (உ) சரி; (கா) சரியன்று
(4) (உ) சரியன்று; (கா) சரியன்று

49. **நிரல்படுத்துக.**

(1) தரைப்படை, விமானப்படை, கடற்படை
(2) கடற்படை விமானப்படை, தரைப்படை
(3) தரைப்படை, கடற்படை, விமானப்படை
(4) கடற்படை, தரைப்படை, விமானப்படை

50. **பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| (a) | விடிந்தது காலை | (i) | பொக்கென |
| (b) | வீழ்ந்தது ஆணவம் | (ii) | கக்கக்கென |
| (c) | கொட்டியது பறை | (iii) | தெற்றென |
| (d) | செய்தது நகை | (iv) | தக்தக்கென |

| | **(a)** | **(b)** | **(c)** | **(d)** |
|---|---|---|---|---|
| (1) | (iii) | (i) | (ii) | (iv) |
| (2) | (iii) | (i) | (iv) | (ii) |
| (3) | (iii) | (iv) | (i) | (ii) |
| (4) | (iii) | (iv) | (ii) | (i) |

- o 0 o -



www.examrace.com

**Space For Rough Work**

Exam Race



www.examrace.com